O.S.197/2022 நாள் 05.10.2023

பி.வா.சா.1 முகம்மது மீரம்மாள்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>–

எனது தாயார் வேலை எதுவும் பார்க்கவில்லை. எனது தாயாருக்கு சொத்துக்கள் கிடைப்பதற்கு முன்பு எந்த வருமானமும் கிடையாது. வாதி சென்னையில் குடியிருந்து வருகிறார். எனது தாயார் இறந்த பின்பு நான் கத்தாரில் குடியிருந்து வந்தேன். எனது தாயாருக்கு 4 வாரிசுகள் வாதி மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகள் ஆகும். எனது தாயார் எங்கள் நால்வரையும் சமமாக தான் நடத்தி வந்தார் என்றால் சரிதான். பிராது 1ம் தபசில் சொத்து முழுவதும் எனது தாயாருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். 1ம் தபசில் சொத்தின் மொத்த விஸ்தீர்ணம் 44 சென்ட் ஆகும். அதில் 40 கடைகள், திருமண மண்டபம், 9 வீடுகள் அடங்கியுள்ளது. இவை அனைத்தும் ஒரே சொத்தாகும். எனது தாயார் உயிருடன் இருந்த காலத்தில் 5.11.2013 ல் வா.சா.ஆ.7 செட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்றால் சரிதான். அந்த செட்டில்மெண்ட் பத்திரத்தில் எனது தாயார் ஆயுள்காலம் வரை அனுபவித்துக் கொள்ளும் உரிமையை தக்க வைத்துள்ளார் என்றால் சரிதான். என் தாயார் ஆயுளுக்குப் பின்பு அதில் வரும் வருமானங்களை பிரித்துக் கொள்ள காட்டியுள்ளார் என்றால் சரிதான். அந்த செட்டில்மெண்ட் பத்திரத்தை எந்த காலத்திலும் ரத்து செய்வதற்கு உரிமை இல்லை என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். செட்டில்மெண்ட் பத்திரத்தை எழுதி வைப்பதற்கு என்னுடைய தாயாருக்கு முழு உரிமை உள்ளது என்றால் சரிதான். செட்டில்மெண்ட் பத்திரத்தை எழுதி வைத்த பின்பு 7 ஆண்டுகள் கழித்து 12.8.2020 ல்

செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்து ஒரு ஆவணம் என் தாயார் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். அந்த ரத்து பத்திரத்தில் என்னுடைய தாயாரின் வாரிசுகள் யாரும் சாட்சி கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய அம்மாவின் ஆயுள் காலம் வரை அனுபவித்து வரும் உரிமையை தக்க வைத்து கொண்டதால் அந்த சொத்துக்களின் தீர்வையை என்னுடைய தாயார் பெயரில் இருந்து மாற்றம் செய்யாமல் வைத்திருந்தார் என்றால் சரிதான். இன்று நீதிமன்றத்திற்கு 1ம் பிரதிவாதி வந்துள்ளார் என்றால் சரிதான். முகம்மதியர் சட்டப்படி ஆண் வாரிசுகளுக்கு 2 பங்கும், பெண் வாரிசுகளுக்கு 1 பங்கும் கிடைக்கக்கூடியது என்றால் சரிதான். ஆனால் நில உரிமையாளர்கள் அந்த சொத்தை ஆவணம் எழுதி கொடுக்கும்போது அவர்கள் விருப்பப்படி எழுதித் தருவார்கள் என்றால் சரிதான். எனது தாயார் இறப்பதற்கு முன்பே வாதியின் மகனுக்கு திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான். அந்த திருமணத்திற்கு என் தாயாரோ, மற்ற வாரிசுகளோ செல்லவில்லை என்றால் சரிதான். செட்டில்மெண்ட் ரத்து பத்திரத்தில் என்ன காரணம் சொல்லப்பட்டுள்ளது என்று எனக்குத் தெரியுமா என்றால் பிள்ளைகளுக்குள் ஒற்றுமை இல்லை என்றும், என்னுடைய தாயாருக்கு தேவை இருந்ததாலும் என் தாயார் ரத்து செய்துவிட்டார். ஆனால் செட்டில்மெண்ட் ரத்து பத்திரத்தில் 4 பிள்ளைகளுக்கும் இடையே ஒற்றுமை இல்லை என்று சொல்லப்படவில்லை என்றால் சரிதான். என் தாயாருக்கு தேவை இருப்பதாக ரத்து பத்திரத்தில் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். இந்த ரத்து பத்திரத்தில் 4 பிள்ளைகளும் ஒற்றுமையாக இருப்பதாக தான் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு 2004 ல் திருமணம் ஆனது. ரத்து பத்திரத்தை

என் தாயார் பிறப்பிக்கும்போது நான் இந்தியாவில் இல்லை என்றால் சரியல்ல. நான் இந்தியாவில் தான் இருந்தேன். நான் இந்தியாவில் இருந்தேன் என்பதை காட்டுவதற்கு நான் என்னுடைய கடவுச்சீட்டை தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேனா என்றால் இருக்கிறேன். செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்த பின்னர் என்னுடைய தாயார் ஆண் வாரிசுக்கு எந்த ஒரு சொத்தும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். என் தாயார் எனக்கு தனியாக எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரத்தில் 7 கடையும், 9 வீடுகளும், அடங்கிய 14–1/2 சென்ட் இடமும் எனக்கு கொடுத்தார் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதிக்கு 10–1/2 சென்ட் நிலமும், அதில் கட்டப்பட்ட 4 கடைகளும், காலி இடமும் என்னுடைய தாயார் எழுதி கொடுத்துள்ளார். என்னுடைய தாயார் 13–1/2 சென்ட் இடத்தையும், அதில் உள்ள கட்டிடங்களையும் விற்று விற்றார் என்றால் சரிதான். மீதமுள்ள 6 சென்ட்ம், 1 கடையும் தான் வாதி பெயரில் என் தாயார் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். என் தாயார் ரத்து பத்திரம் எழுதுவதற்கு முன்னர் மற்ற வாரிசுகளிடம் ஏதாவது எழுதி வாங்கினாரா என்றால் இல்லை. என் தாயாருக்கு முதல் அறுவை சிகிச்சை செய்யும்போது வாதி தான் அதற்கான செலவுகளை செய்தார் என்றால் இல்லை. எனது தகப்பனார் 2014ல் இறந்து விட்டார். முதல் செட்டில்மெண்ட் பத்திரம் எழுதும் காலத்தில் எனது தகப்பனார் உயிருடன் தான் இருந்தார் என்றால் சரிதான். என் தாயார் சொத்துக்களை 4ம் பிரதிவாதிக்கு எவ்வளவு தொகைக்கு விற்றார் என்று எனக்குத் தெரியுமா என்றால் ரூ.1–1/2 கோடிக்கு விற்றார். என் தம்பி கொஞ்சம் கடன் வாங்கியிருந்தார். அதற்கும், என் தாயாரின் மருத்துவ செலவுக்காகவும் அந்த பணத்தை செலவு செய்தார். செட்டில்மெண்ட் ரத்து பத்திரத்தில்

என்னுடைய தாயார் ஏற்கனவே எழுதி கொடுத்த 5.11.2013 ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரம் முகம்மதியர் சட்டப்படி செல்லக்கூடியதில்லை என்று ஏதாவது சொல்லப்பட்டுள்ளதா என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. என்னுடைய தாயார் செட்டில்மெண்ட் பத்திரம் ரத்து செய்யும்போது வாதிக்கு அதைப் பற்றி தெரியாது என்றால் தொலைபேசி மூலமாக வாதியை என் தாயார் தொடர்பு கொண்டார். ஆனால் வாதி அதற்கு சரியாக பதில் சொல்லாததால் என் தாயார் செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்துவிட்டார். என்னுடைய தாயாருக்கு பணத் தேவை இருந்ததால் தான் செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்ததாக நான் சொல்லியிருப்பது உண்மையில்லை என்றால் சரியல்ல. 2 வது முறையும் என் தாயாருக்கு அறுவை சிகிச்சை செய்யும்போது என் தாயார் கைவசம் பணம் இருந்தது என்றால் சரியல்ல. கொரனா காலகட்டத்தில் என் தாயார் வசம் பணம் இல்லை. கட்டிடத்தின் அனைத்து வாடகைகளையும் என் தாயார் வாங்கிக் கொண்டார் என்றால் சரிதான். 1 ம் தபசில் சொத்தில் ஒரு திருமண மண்டபம் உள்ளது என்றால் சரிதான். எனக்கும் வாதிக்குமிடையே 2014 ம் ஆண்டிலிருந்து பேச்சுவார்த்தை இல்லை. என் தாயார் எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரத்தில் ரத்து செய்வதற்கு அவருக்கு உரிமை இல்லை என்று ஒப்புக் கொள்ளப்பட்ட நிலையில் ரத்து பத்திரம் செல்லக்கூடியதில்லை என்றால் சரியல்ல. 06.01.2022 ம் தேதியன்று என் தாயார் இறந்துவிட்டார். ரத்து பத்திர விவரம் தெரிய வந்ததால் தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்தார் என்றால் என் தாயார் உயிருடன் இருக்கும்போதே ரத்து பத்திர விவரம் வாதிக்கு தெரியும். ரத்து பத்திரத்தை வாதி பார்க்கவும் இல்லை, அதைப் பற்றிய விவரம் அவருக்கு தெரியவும் இல்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக

சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வாதியின் கணவர் வேலை எதுவும் இல்லாமல் தான் இருந்து வருகிறார். பொருளாதார ரீதியாக அவர் நடுத்தர குடும்பத்தை சேர்ந்தவர் என்றால் சரியல்ல. தீர்வை ரசீது, தண்ணீர் வரி ரசீது, மின் கட்டண ரசீது அனைத்தும் கூட்டு உரிமையாளர் என்ற நிலையில் வாதிக்காகவும் சேர்த்து செலுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் தாயார் இருக்கும் காலத்திலே தாவா சொத்தில் இருந்து வரும் வருமானத்தை வாதிக்கும் கொடுப்பார் என்றால் சரியல்ல. முகம்மதியர் சட்டப்படி எனது தாயார் அவரது சொத்தை யாருக்கு வேண்டுமானாலும் எழுதி வைக்கலாம் என்று தெரிந்து தான் ரத்து பத்திரம் மற்றும் இதர செட்டில்மெண்ட் பத்திரங்கள் எழுதி வைத்தார். செட்டில்மெண்ட் ரத்து பத்திரம் எழுதுவதற்கும், இதர செட்டில்மெண்ட் பத்திரங்கள் எழுதுவதற்கும் எனது தாயாருக்கு சட்டப்படி உரிமை இல்லை என்றால் சரியல்ல. 5.11.2013 ல் எழுதி வைத்த செட்டில்மெண்ட் பத்திரம் இஸ்லாமிய சட்டப்படி செல்லத்தக்கது என்றும், ஆகவே அதை மாற்றி எழுதுவதற்கு என் தாயாருக்கு உரிமை இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. என் தாயார் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை செட்டில்மெண்ட் பத்திரம் ரத்து செய்த பின்பு வாதிக்கும், 2, 3 பிரதிவாதிகளுக்கும் சரிசமமாக பிரித்துக் கொடுக்கவில்லை என்றும், ஆகவே என் தாயார் வாதி, 2, 3 பிரதிவாதிகளுக்கு பிறப்பித்து வைத்த செட்டில்மெண்ட் பத்திரம் சட்டப்படி செல்லத்தக்கது இல்லை என்றும், அது எந்த காலத்திலும் நடைமுறைக்கு வரவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. வாதி வழக்கில் கோரிய பரிகாரம் அவருக்கு கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு கடன் இருந்தது என்பதற்கும்,

அதனை என் தாயார் அடைத்தார் என்பதற்கும் ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

மறுவிசாரணை இல்லை.